பக்கங்கள்:-23

# காலை முரசு

| முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2058 | தை 07 | புதன்கிழமை | 21.01.2026 | அதிர்வு 174 |
|---|---|---|---|---|---|

## நாட்டில் வேகமாக பரவி வரும் வைரஸ்

### மக்களுக்கு எச்சரிக்கை



இலங்கையில் நிலவும் குளிரான காலநிலை காரணமாக வைரஸ் தொற்றுக்களால் ஏற்படும் பாதிப்புகள் அதிகரித்துள்ளன என்று 07



# தமிழ் மக்களின் அபிலாஷைகளை பிரதிபலிக்கும் ஆவணம் தயாரிப்பு

## இணைந்து செயலாற்ற வருமாறு ஏனைய கட்சிகளுக்கு தமிழரசுக் கட்சி, சங்குக் கூட்டணி பகிரங்க அழைப்பு



*(எஸ்.நிதர்ஷன்)*

**“தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கக்கூடிய ஓர் ஆவணத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சியும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் தயாரிக்கவுள்ளன. இந்த முயற்சியில் தமிழ்த் தேசிய பரப்பில் இயங்கும் ஏனைய தரப்புகளும் எம்முடன் இணைந்து செயலாற்ற வேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றோம்.”**

**- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரனுடன் நேற்று இணைந்து நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.** 07




சங்குக் கூட்டணிக்கும், தமிழரசுக் கட்சியின் தலைவர் மற்றும் செயலாளருக்கும் இடையிலான நேற்றைய கலந்துரையாடலில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறிதரனின் அரசமைப்பு கவுன்ஸிலில் உறுப்பினர் பதவி மற்றும் செயற்பாடுகள் குறித்தும் அதிகம் பேசப்பட்டதாக அறியவந்தது.

தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவின் முடிவை சிறிதரன் ஏற்றுச் செயல்படுவாரா என்று சங்கு கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சியின் தலைவர்கள் கரிசனையுடன் கேள்வி கேட்டார்கள்.

“அவர்தான் (சிறிதரன்தான்) தீர்மானிக்க வேண்டும்” – என்று விட்டேத்தியாகப் பதில் கூறி நழுவப் பார்த்தார் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம்.

ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் விடவில்லை. “இது உங்கள் கட்சிப் பிரச்சினை மாத்திரமல்ல, தமிழ் தேசிய அரசியல் தொடர்பான பிரச்சனை. அதனால் இதனை கட்சி வட்டத்துக்குள் அடக்கிப் பேச 06




# தமிழ் தெரியாத செம்மறி! எமக்குப் புக்க வேண்டாம்!!

## நாடாளுமன்றில் நேற்று இளங்குமரன் எம்.பியையும் ஜனாதிபதியையும் கிழித்துத் தொங்கவிட்ட அர்ச்சுனா

அடிப்படை அறிவுகூட இல்லாதவர்களையே யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களாக என்.பி.பி. அரசு வைத்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"உணவு, உடை, உறையுள் என்பனவே அடிப்படை தேவைகள் என்பது தரம் ஒன்று மாணவருக்குக் கூட தெரியும்.

ஆனால் உணவு, உறையுள், வீடு என ஜனாதிபதியின் மேடையில் இருந்துகொண்டு செம்மறி ஒன்று கூறுகின்றது. இப்படியான செம்மறிகளையே யாழ்ப்பாணம் மாவட்ட எம்.பிக்களாக என்.பி.பி. அரசு வைத்துக்கொண்டுள்ளது.

உணவு, உடை, உறையுள் என்பதைக் கூடச் சரியாகச் சொல்ல முடியாதவர்களை வைத்துகொண்டு என்ன செய்வது?

ஜனாதிபதி யாழ்ப்பாணத்துக்கு வந்து புக்க (பொங்கல்) வழங்கிவிட்டுச் சென்றுள்ளார். நாம் புக்க கேட்கவில்லை.

வலிகாமம் வடக்கில் உள்ள காணிகளை விடுவியுங்கள். இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கட்டுப்படுத்துங்கள். ஆனந்த சுதாகரன் போன்ற அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள் என்றே நாம் கேட்கின்றோம்.

இவற்றைச் செய்யாமல், புக்க (பொங்கல்) வழங்கி என்ன பயன்?" - என்றார்.

# பிரதமருக்கு எதிரான பிரேரணை எங்கே?

## சஜித் அணியிடம் ஆளுந்தரப்பு கேள்வி




"பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்படுமா அல்லது கைவிடப்படுமா என்பதை எதிரணி அறிவிக்க வேண்டும்."

- இவ்வாறு சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் தலைமையில் கூடியது.

ஆரம்ப கட்ட சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் எதிரணி கையொப்பம் திரட்டுவதாகச் செய்திகள் வெளியாகின.

குறித்த பிரேரணையைச் சபாநாயகரிடம் கையளித்தால் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் அது தொடர்பில் விவாதம் நடத்துவதற்கு நாம் தயார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பம் திரட்டிவிட்டு, அதனைச் சமர்ப்பிக்காமல் இருப்பது பாரதூரமான பிரச்சினையாகும்.

எனவே, நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்படுமா அல்லது இல்லையா என்பதை எதிரணி தெளிவுபடுத்த வேண்டும்.

ஏனெனில் நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதற்கு அவர்களின் நிலைப்பாடு முக்கியமாகும்." - என்றார்.


# கிவுல் ஓயாத் திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி

## வடக்கில் தமிழர்களின் காணிகள் பறிபோகும் அபாயம்

கிவுல் ஓயா திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அத்துடன், இந்தத் திட்டத்துக்கான நிதியை 2 ஆயிரத்து 345. 6 கோடி ரூபாவாக அதிகரிக்கவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த வருடத்திலேயே கிவுல் ஓயா திட்டத்தை ஆரம்பித்து எதிர்வரும் 2031ஆம் ஆண்டுக்குள் நிறைவு செய்யவும் நேற்றுமுன்தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டுள்ளது.

வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் நிலவும் குடிதண்ணீர் பற்றாக்குறை, வறுமை, குறை விவசாய உற்பத்தித் திறன் போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வாகவே கிவுல் ஓயா திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்று கூறப்படுகின்றது. எனினும், இது வடக்கில் தமிழ் மக்களின் காணிகளை அபகரிக்கும் நோக்கிலும் - குடிப்பரம்பலை திட்டமிட்ட முறையில் மாற்றியமைக்கும் நோக்கிலும் கொண்டுவரப்படுகின்றது என்று இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட காலம் முதல் எதிர்ப்புகள் வெளியிடப்பட்டு வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.




முன்னதாக, கிவுல் ஓயா அபிவிருத்தி கருத் திட்டத்தை நடைமுறைப்படுத்த கடந்த 2011 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 28ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது. அன்றைய மதிப்பில் 417 கோடி ரூபா செலவில் மகாவலி எல் வலயக் கட்டமைப்பின் ஊடாக 4 வருடங்களில் இந்தத் திட்டத்தைப் பூர்த்தி செய்யத் திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், 2022ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி இந்தத் திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# நம்பிக்கையில்லாப் பிரேரணை நிச்சயம் கொண்டுவரப்படுமாம்

## இது குறித்து அரசு முடிவு எடுக்க முடியாதாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அறிவிப்பு

"பிரதமர் ஹரிணிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கைவிடப்படவில்லை. அது நிச்சயம் கொண்டுவரப்படும்." - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கான நேரம் மற்றும் பொருத்தமான சந்தர்ப்பம் என்பவற்றை எதிர்க்கட்சியே தீர்மானிக்கும்.

இந்த விடயத்தில் அரசு முடிவெடுக்க முடியாது. அரசு கூறும் நேரங்களில் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர நாம் தயார் இல்லை

நம்பிக்கையில்லாப் பிரேரணை முறையாகவும், சரியான நேரத்திலும்



தேவையான கையொப்பங்களைப் பெற்றதன் பின்னர் நாம் சமர்ப்பிப்போம்.

முடிந்தால் மூன்று நாட்கள் கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பான விவாதத்தை நாளை முதலே நடத்துமாறு அரசுக்கு நாம் சவால் விடுக்கின்றோம்." - என்றார்.









## பொருளாதார மீட்சி குறித்து

# ஐரோப்பிய ஆணையாளருடன் பிரதமர் ஹரிணி கலந்தாய்வு!

சர்வதேச பங்களிப்புக்கான ஐரோப்பிய ஆணையாளர் சப் சிகேலாவுடன் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய பேச்சு நடத்தியுள்ளார்.

உலகப் பொருளாதார மன்ற மாநாட்டில் பங்கேற்பதற்காகச் சுவிட்சர்லாந்து சென்றுள்ள பிரதமர், அங்கு முக்கியத்துவமிக்க சந்திப்புகளை நடத்தி வருகின்றார்.

இந்நிலையில் உலகப் பொருளாதார மன்ற மாநாட்டுக்குச் சமாந்தரமாக மேற்படி சந்திப்பை அவர் நடத்தியுள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள பிரதமர் ஹரிணி அமரசூரிய,

“சர்வதேச பங்களிப்புக்கான ஐரோப்பிய ஆணையாளர் சப் சிகேலாவைச் சந்தித்து ஆக்கபூர்வமான இருதரப்புப் பேச்சுவார்த்தையொன்றை முன்னெடுத்தேன்.

இதன்போது, பொருளாதார மீட்சி, கல்விச் சீர்திருத்தம், டிஜிட்டல் பரிமாற்றம், காலநிலை சகிப்புத்தன்மை மற்றும் நிலையான அபிவிருத்தி ஆகியவற்றில் இலங்கை – ஐரோப்பிய ஒன்றிய ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து நாம் கலந்துரையாடினோம்.

அத்துடன், இலங்கையின் சீர்திருத்த நிகழ்ச்சி நிரல் மற்றும் நீண்டகால வளர்ச்சி பற்றிய முன்னுரிமைகளுக்கு ஆதரவளிப்பதற்கான தனது உறுதிப்பாட்டை ஐரோப்பிய ஒன்றியம் மீண்டும் உறுதிப்படுத்தியது.” – என்றார்.










# தற்போதைய பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு மாற்றீடான சட்ட வரைவு குறித்து யாழில் ஆய்வு













பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாப்பதற்காக முன்மொழியப்பட்ட சட்ட வரைவு தொடர்பான திறந்த கலந்துரையாடல் சட்டம் மற்றும் கொள்கைகளுக்கான யாழ்ப்பாணக் கற்கை நிலையத்தின் ஒருங்கிணைப்பில், நேற்று யாழ் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெற்றது. இதில் அரசியற் பிரமுகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், இளையோர் மற்றும் மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என ஏறத்தாழ 100 பேரளவில் பங்குபற்றினர்.

தொடக்க உரையாற்றிய அந்நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சட்டத்தரணி கலாநிதி.க. குருபரன் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உறுதியளித்திருந்ததைச் சுட்டிக்காட்டினார். அதேசமயம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குகின்ற விடயம் தேசிய மக்கள் சக்தியின் சிங்கள மொழி மூல தேர்தல் விஞ்ஞானபத்தில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை என்ற விவரம் ஜே.வி.பியின் ஆரம்பகால உறுப்பினர் லயனல் போபகேயின் அண்மைய கட்டுரையில் உள்ளமையை அவர் மேற்கோள்காட்டினார். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கி புதியதொரு சட்டத்தைக் கொண்டு வர தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தயக்கத்தோடு முன்வந்திருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழர் தரப்பினுடைய நிலைப்பாடு பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதும் அதற்குப் பதிலீடாக வேறெந்தச் சட்டமும் தேவையானது அல்ல என்பதுதான். அதை அவர் கோடிட்டுக் காட்டினார். மேலும் தற்போது நடைமுறையில் உள்ள தண்டனைச் சட்டக்கோவை, குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை மற்றும் இதர குற்றவியல் சட்டங்களின் ஏற்பாடுகள் போருக்குப் பின்னரான நிலைமையைக் கையாளக் கூடியவை, அதற்கென தனித்து பயங்கரவாத தடைச்சட்டம் என்ற பெயரில் ஒரு சட்டம் தேவையில்லையென அவர் குறிப்பிட்டார்.

சர்வதேசச் சட்டத்தில் இதுவரை “பயங்கரவாதம்“ என்ற சொற்தொடருக்கான ஏற்கப்பட்ட வரைவிலக்கணம் இல்லை என்பதையும் சுட்டிக்காட்டிய குருபரன், இந்தச் சட்ட வரைவிலே பயங்கரவாதத்திற்கான வரைவிலக்கணம் மிகவும் நெகிழ்வுப் போக்கான நிலையிலே அனைத்தையும், எதையும் உள்வாங்கலாம் என்ற தொனியிலே முன்வைக்கப்பட்டுள்ளது என்றார். ஊரடங்கு உத்தரவுகளைப் பிறப்பித்தல், பொதுமக்கள் ஒன்றுகூடக் கூடாதென்ற அறிவித்தலை வழங்கல், கூட்டத்தைக் கூட்டுவதற்குத் தடை விதித்தல் போன்ற அவசரகால தடைச் சட்டத்தின் தற்காலிகக் கட்டளைகளை மேற்கொள்ளும் விடயங்களைக் கூட நிரந்தரச் சட்டமாகக் கொண்டு வருவதற்கு முயற்சிக்கப்படுகின்றதென அவர் சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து கருத்துரைத்த அவையினர், அறகலய போராட்டத்தின் பயனாக உருவாகிய அரசாங்கம் மீண்டும் ஓர் அறகலய உருவாகுவதனைத் தடுக்கும் விதமாக இந்தச் சட்டத்தை உருவாக்குவதாகவும், தமிழ் மக்களினுடைய அரசியற் போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்ய வேண்டும் என்ற காரணத்தினால் அச்சுறுத்தும் பாணியிலான சட்ட ஏற்பாடுகளைக் கொண்டதாக முன்மொழியப்பட்ட சட்ட வரைவாக இது அமைந்துள்ளாதாகவும், ஆகையால் இந்த சட்ட வரைவைத் தமிழ் மக்கள் முற்றுமுழுதாக நிராகரிக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டனர்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சி.சிறீதரன், வேலன் சுவாமிகள், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சர்வேஸ்வரன், “குரலற்றவர்களின் குரல்“ அமைப்பின் தலைவர் மு.கோமகன், கிராமிய உழைப்பாளர் சங்கத் தலைவர் இன்பம், யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் யசோதரன், சமூக செயற்பாட்டாளர் முரளிதரன் உள்ளிட்ட சமூக, அரசியற் செயற்பாட்டாளர்கள் இந்நிகழ்வில் கருத்துத் தெரிவித்தனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேண்டிய நிலைமை இல்லை" என்ற சாரப்பட சுரேஷ் கூறினார் எனத் தெரிகிறது.

தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், புளொட் தலைவர் சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., சங்குக் கூட்டணியின் பொதுச் செயலாளர் நா.ரட்ணலிங்கம் எல்லோரும் சிறிதரனின் செயற்பாட்டை குறை கூறிக் கருத்துத் தெரிவித்தனர் எனத் தெரிகிறது. சிறிதரனின் ஜமீனான கிளிநொச்சியில் அவருக்குப் பரமவைரியாக விளங்கும் சந்திரகுமாரும் கூட்டத்தில் இருந்தார். அவர் இது விடயத்தில் என்ன கருத்துத் தெரிவித்திருப்பார் என்பதை நான் குறிப்பிடத் தேவை இல்லை.

மொத்தத்தில் சிறிதரனுக்கு எதிரான கருத்து நிலைப்பாடு இந்தக் கூட்டத்திலும் ஓங்கி ஒலித்ததாகத் தெரிகிறது.

இதே சமயம் சங்கு கூட்டணியின் கூட்டில் சிறிதரன் தொடர்பாக ஒரு முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவந்தது.

அரசமைப்புக் கவுன்ஸிலில் சிறிதரனின் செயற்பாட்டுக்கு எதிராக ஏற்கனவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பகிரங்கமாக கண்டனமும் அதிருப்தியும் தெரிவித்து இருக்கின்றமை போல சங்கு கூட்டணியின் சார்பில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் செல்வம் அடைக்கலநாதனும் பகிரங்கக் கண்டன, அதிருப்தி அறிவிப்பு ஒன்றை வெளியிட வேண்டும் என்று சங்குக் கூட்டணி தீர்மானித்திருப்பதாகத் தெரிகின்றது. செல்வத்தின் அறிவிப்பு எந்த சமயத்திலும் வெளிவரலாம் எனவும் அறிய வந்தது.

எது, எப்படியாயினும் தம்மை அரசமைப்புக் கவுன்ஸில் உறுப்பினர் பதவியிலிருந்து விலகுமாறு தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு பணிப்புரை விடுத்தமை தொடர்பாக சிறிதரன் தமிழரசுக் கட்சியின் தலைவருக்குப் பதிவுத் தபாலில் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றார் என்று ஏற்கனவே தெரிவித்திருந்தேன் அல்லவா? அதில் சில நியாயப்பாடுகளை சிறிதரன் வைத்திருக்கிறார்.

இந்தக் கடிதத்தை 'திரு.கந்தையா சிவஞானம், தலைவர் (பதில்), இலங்கைத் தமிழரசு கட்சி' என்று முகவரியிட்டு எழுதியுள்ள சிறிதரன் கடிதத்துக்கு 'அரசியலமைப்புபேரவை'என்றுதலைப்பிட்டிருக்கின்றார்.

"மேற்படி விடயம் தொடர்பாக திரு. சுமந்திரன் எழுதிய கடிதம் கிடைக்கப்பெற்றது" என்பது அவரது முதல் வசனம்.

இதில் கவனிக்கப்பட வேண்டிய இரண்டு விடயங்கள் உள்ளன. ஒன்று – கந்தையா சிவஞானத்தை 'தலைவர் (பதில்)' என்று குறிப்பிடும் சிறிதரன், சுமந்திரனை வெறுமனே 'திரு.எம்.ஏ.சுமந்திரன்' என்று தான் குறிப்பிடுகின்றார். 'பொதுச் செயலாளர்' அல்லது 'பொதுச் செயலாளர் (பதில்)' என்று அவர் குறிப்பிடவே இல்லை. அதாவது, அவரை பொதுச் செயலாளர் பதவியில் ஏற்க சிறிதரன் தயார் இல்லை என்பதுதான் இதன் அர்த்தம்.

கட்சிக்கு எதிராக முன்னாள் எம்.பி. சிவமோகன் யாழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் அவர், சிவஞானத்தைத் தலைவர் பதவியில் ஏற்க முடியாது என்று தமது மனுவில் தெரிவித்திருந்தார். அந்த வழக்கின் எதிர்மனுதாரர்களில் சிறிதரன் மட்டும் அந்த வழக்குக்குத் தனியான பதில் மனு தாக்கல் செய்தார். அப்போது மனுதாரர் சிவமோகன் குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தையும் (சிவஞானத்தைப் பதில் தலைவராக ஏற்க முடியாது என்ற விடயம் உட்பட) தாம் ஏற்கிறார் என சிறிதரன் பதில்மனுவில் தெரிவித்திருந்தார். அச்சமயத்தில் சுமந்திரன் கட்சியின் பதில் பொதுச் செயலாளராக வரவில்லை.

ஆயினும், அப்போது நீதிமன்றத்தில் சிவஞானத்தை தலைவராக ஏற்க மறுத்த சிறிதரன், இப்போது இந்தக் கடிதத்தில் அவரைப் பதில் தலைவராக ஏற்று இருக்கிறார், ஆனால் 'பதில் பொதுச் செயலாளர்' பதவியில் கூட சுமந்திரனை ஏற்க அவர் தயார் இல்லை.

அதேசமயம் இந்த கடிதம் மூலம் கட்சித் தலைவர் சிவஞானத்துக்கு அரசமைப்புப் பேரவை தொடர்பில் சிறிதரன் ஒரு சிறிய அரசியல் பாடமும் எடுத்திருக்கின்றார்.

"அரசியலமைப்புப் பேரவை ஒரு சுயாதீனமான பேரவை. இதில் எவ்வித மான அரசியல் தலையீடும், கட்சி செல்வாக்கும் இருக்க முடியாது. இதில் எமது கட்சியின் செல்வாக்குகளை நான் பிரயோகிக்க முடியாது. இந்தச் சபை மூலம் கட்சி சார்பு அரசியலும் செய்ய முடியாது. செய்யக்கூடாது என்பதை தாங்கள் அறிவீர்கள்" என்று சிறிதரன் தெரிவித்திருக்கிறார்.

"அரசியலமைப்பு பேரவையில் எனது பங்களிப்பும் வாக்களிப்பும் மனச்சாட்சியின் படியானவை (vote by conscience). ஒவ்வொரு அரசியலமைப்பு பேரவை உறுப்பினரும் சுயாதீனமாகச் செயல்பட வேண்டும். அத்துடன் நான் அங்கம் வகிக்கும் அரசியலமைப்பு பேரவைக்கு நான் எனது கட்சியின் அரசியல் குழு அல்லது மத்திய குழுவால் பெயர் குறித்து நியமிக்கப்படவில்லை."

"என்னை எனது கட்சியின் அரசியல் குழு சிலரின் தனிப்பட்ட அரசியல் விரோதங்களுக்காகவும் நிகழ்ச்சி நிரலுக்காகவும் பதவி விலகக் கோரியிருப்பது எனக்கு பெரும் ஏமாற்றத்தைத் தருகிறது. என்னை கட்சியிலிருந்து நீக்கும் முயற்சியின் ஓர் அங்கமாகவே எனக்கு திரு எம்.ஏ.சுமந்திரன் அனுப்பிய மேற்படி கடிதத்தை நான் கருதுகிறேன். தமிழ் மக்களின் தனிப்பெரும் கட்சியை அழித்து விட வேண்டும் என்ற நிகழ்ச்சி நிரலுக்கு நாம் இரையாகிவிடக் கூடாது." – என்றெல்லாம் சிறிதரன் விளக்கமளித்திருக்கின்றார்.

"(சுமந்திரனின்) கடிதத்தில் குறிப்பிடப்பட்ட எட்டு விடயங்களில் முதலாவது விடயத்திற்கு திருகோணமடையில் நடைபெற்ற மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தெளிவுபடுத்தி இருந்தேன். ஏனைய ஏழு விடயங்கள் தொடர்பில் பக்கச் சார்பற்ற சுயாதீன கேட்போர் முன்னிலையில் அல்லது கட்சியின் ஒழுக்காற்று குழுவின் முன்னிலையில் ஆதாரங்களுடன் தெளிவுபடுத்த நான் தயாராக உள்ளேன். அதற்கான செயற்பாட்டை செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்." – என்று சிறிதரன் கூறியுள்ளார்

இதற்கு தமிழரசு கட்சி கூறப் போகின்ற பதில் என்ன? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

* * *

தமிழர் தாயகத்தின் நிலப்பரப்பை கூறையாடி சிங்கள மயப்படுத்தும் தேசிய மக்கள் சக்தி அரசின் மிக மோசமான திட்டம் பற்றிய ஒரு தகவல் நேற்று கட்டவிழ்ந்திருக்கின்றது. இலங்கைத் தமிழரசுக் கட்சி உட்பட தமிழ்த் தேசியக் கட்சிகள் பலவும் அதிர்ந்து போய் இருக்கின்றன. இது குறித்து இன்று அல்லது நாளை தமிழர் தரப்பிலிருந்து கடுமையான எதிர்வினை கிளம்பும் என்று எதிர்பார்க்கக் கூடியதாக விடயங்கள் பேசப்படுகின்றன.

மணலாறில் நாலாயிரத்திற்கு மேற்பட்ட சிங்களக் குடியேற்றவாசிகளை நிலை நிறுத்தும் நோக்கோடு கிவுல் ஓயாத் திட்டம் முன்னெடுக்கப்பட இருக்கின்றது. அதற்கு இந்த வார அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருப்பதாக அதிர்ச்சி தரும் செய்தி வெளியாகியிருக்கின்றது.

2011 இல் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இந்தத் திட்டம் 417 கோடி ரூபா செலவில் முன்னெடுக்க முயற்சிக்கப்பட்டது. மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் எல் வலயத்தின் அபிவிருத்தி என்ற பெயரில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி நிலைநிறுத்தும் இந்தத் திட்டம் அப்போது எதிர்ப்பால் கைவிடப்பட்டது. பின்னர் கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்திலும் ஆரம்பிக்கப்பட்டு தமிழ் மக்களின் எதிர்ப்பாலும் பொருளாதார நெருக்கடியாலும் கைவிடப்பட்டது. இப்போது அந்தத் திட்டத்தை 2,345 கோடி ரூபா செலவில் விரைந்து முன்னெடுக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி இருக்கின்றது.

இதற்கு எதிராகத் தமிழ் தேசியக் கட்சிகள் முழுமுனைப்பில் களம் இறங்கும் சூழல் தென்படுகின்றது. தேசிய மக்கள் கட்சியின் இந்த நடவடிக்கை மூலம் அதன் 'இனவாதம் இல்லாத பண்பு' என்ற முகமூடி கிழிகின்றது. பேரினவாதக் கோரமுகம் வெளிப்படுகின்றது. அந்தக் கட்சிக்கு கூசா தூக்கும் வடக்குத் தமிழ்ப் பிரதிநிதிகள் இந்த அராஜகத் திட்டம் பற்றி ஒரு தடவை ஊன்றிப் படித்து, அறிந்து, விளைவுகளைப் புரிந்து கொண்டு, தாம் சார்ந்த தரப்பின் உண்மை முகத்தை அறிய முயல வேண்டும். பதவி ஆசையும் கதிரை மோகமும் அவர்கள் கண்களைக் கட்டிப் போட்டிருப்பதால் இது பற்றி அவர்கள் அலட்டிக் கொள்ள மாட்டார்கள் என்பது நிச்சயம்...!

## வீழ்ச்சியடைந்த முட்டை விலை



சந்தையில் முட்டை விலை வேகமாக வீழ்ச்சியடைந்து வருவதாக அகில இலங்கை முட்டை வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, சராசரி அளவிலான முட்டை சுமார் 30 ரூபாவுக்கு விற்கப்படுவதாக அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

முட்டை உற்பத்தி அதிகரித்துள்ளதே இந்த விலை வீழ்ச்சிக்கு முக்கிய காரணம் என சங்கத்தின் செயலாளர் அனுர சிறி மாரசிங்க தெரிவித்துள்ளார்.



# பேர வாவியை மீட்டெடுக்க 2.5 பில்லியன் ரூபா ஒதுக்கீடு

கொழும்பின் முக்கிய பகுதியில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க பேர வாவியை 2.5 பில்லியன் ரூபாய் செலவில் தூய்மைப்படுத்தி, அதனை நீச்சல் மற்றும் நீர் விளையாட்டுகளுக்கு ஏற்ற பாதுகாப்பான இடமாக மாற்றுவதற்கான பாரிய திட்டமொன்றை அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இந்தத் திட்டம் குறித்து கருத்து வெளியிட்ட பேர வாவி மறுசீரமைப்பு செயலணியின் தலைவர் சதுர கஹதஆராச்சி, "வாவியில் சட்டவிரோதமாக கழிவுநீரை வெளியேற்றி வந்த 192 இடங்களில் பெரும்பாலானவை தற்போது மூடப்பட்டுள்ளன.

இந்த கழிவுநீரினால் ஏற்பட்ட கடுமையான துர்நாற்றம் தற்போது பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது," என்று தெரிவித்தார்.

குறிப்பாக, சினமன் லைஃப் குடியிருப்புப் பகுதிகளில் நிலவிய கடும் துர்நாற்றத்திற்கு காரணமாக இருந்த அரசாங்கத்தின் கழிவுநீர்க் குழாய் கசிவுகள் தற்போது சீர்செய்யப்பட்டுள்ளதாகவும், ஏனைய பகுதிகளில் திருத்தப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், வாவியின் தரத்தை உயர்த்துவதற்காக அடுத்த மூன்று மாதங்களுக்குள் வாவியில் படிந்துள்ள கழிவுகளை அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அதேநேரம், நீரில் ஒட்சிசன் அளவை அதிகரித்து மீன் இனங்கள் மீண்டும் செழித்து வளர ஏதுவாக நீர் ஊற்றுகள் மற்றும் காற்றோட்ட இயந்திரங்கள் பொருத்தப்படவுள்ளன.

தற்போது வாவியின் நீரின் தரம் "செம்மஞ்சள்" நிலையில் உள்ளதாகவும், அதனை விரைவில் பாதுகாப்பான நிலைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த மறுசீரமைப்புத் திட்டத்துக்காக தனியாரினால் இரண்டு அதிநவீன சூரிய சக்திப் படகுகள் வழங்கப்பட்டுள்ளன.

சூரிய சக்தி மற்றும் மின்கலங்கள் மூலம் இயங்கும் இந்தப் படகுகள் மூன்று ஆண்டுகளுக்கு தூய்மைப்படுத்தல் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ் மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைத்தமிழரசுக்கட்சியும்ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் நேற்று மாலை யாழ். நகரின் விருந்தினர் விடுதியில் சந்தித்துப் பேசின. இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., தர்மலிங்கம் சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன் (பேச்சாளர்), சி.வேந்தன், மு.சந்திரகுமார்மற்றும்ஜனநாயகத்தமிழ்த் தேசியக் கூட்டணியின் பொதுச்செயலாளர் நா.இரட்ணலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் முடிவில் கூட்டாக செய்தியாளர் சந்திப்பு நடத்தப்பட்டது.

அதில், சுமந்திரன் தெரிவித்தவை வருமாறு:-மாகாண சபைத் தேர்தல் முறைமை மறுசீரமைக்கப்பட வேண்டும் என்பதற்காகத் தேர்தலையே நடத்தாமல் இருப்பது எந்தக் காலத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது. ஆகவே, தற்போதிருக்கும் முறையில் தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்பட வேண்டும்.

அரசமைப்பு விவகாரம் சம்பந்தமாக அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் – எடுக்காமல் இருக்கின்ற நடவடிக்கைகள் குறித்து பேசியிருக்கின்றோம். அண்மைக் காலமாக சில ஆயத்தங்கள் செய்வதாக அரசு கூறி வருகின்றது. எவ்வளவு தூரத்துக்குஅதுஉண்மையானதுஎன்பதுதெரியவில்லை.

பிரதம மந்திரி, நீதி அமைச்சர் உள்ளிட்டோர் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தனர்.

இந்தநிலையில் தமிழ் மக்களுடைய அபிலாஷைகளைப் பிரதிபலிக்கக்கூடிய ஓர் ஆவணம் ஒன்றைத் தயாரிக்கலாம் என்று நாங்கள் முடிவெடுத்திருக்கின்றோம். இது, சம்பந்தமாக எங்கள் இரண்டு கட்சிகளும் இணைந்து இந்த முயற்சியிலே ஈடுபடப் போகின்றன. இதன்போது, தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்கும் ஏனைய தரப்புகளும் எங்களுடன் இணைந்து செயலாற்ற வேண்டும் என விரும்புகின்றோம்.

தமிழ்த் தேசத்தின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து ஓர் ஒருமித்த நிலைப்பாட்டை வெளிப்படுத்துவது காலத்தின் தேவையாக இருக்கின்றது. பலர் அரசு சாட்டுப்போக்குச் சொல்லாமல் இருப்பதற்கும் சர்வதேசத்துக்கு நேரடியாகவும் இதுதான், தமிழ் மக்களின் ஆவல் ஆசைகள் என்று சொல்லக்கூடிய வகையிலும் ஏற்கனவே பல வரைவுகள் – யோசனைகள் – ஆவணங்கள் இருந்தாலும் அவற்றையெல்லாம் எல்லாம் பார்த்து ஒரு குறித்த நிலைப்பாட்டை முன்வைப்பதற்கான முயற்சி ஒன்றை நாங்கள் ஆரம்பிக்கின்றோம்.

வெகுவிரைவில் அதனைப் பூர்த்தி செய்வோம். மற்றவர்களும் இணைந்து தங்கள் நிலைப்பாடுகளைத் தெரியப்படுத்தினால் நல்லது.

மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்படுவது சம்பந்தமாக நாங்கள் ஆராய்ந்தோம். மாகாண சபைகள் இயங்காமல் இருப்பது எங்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வாகவே மாகாண சபைகள் முறைமை கொண்டுவரப்பட்டது. அது முழுமையான தீர்வு அல்ல – நாங்கள் ஏற்றுக்கொண்ட தீர்வும் அல்ல. அது பல குறைபாடுகளோடு இயங்கினாலும் ஏழு – எட்டு வருடங்களாக அது இயங்காமல் இருந்தது. அது அரசமைப்புக்கு உட்பட்ட விடயம்.

ஜனாதிபதித் தேர்தல் அறிக்கையிலே ஒரு வருட காலத்துக்குள்ளே மாகாண சபைத் தேர்தலை நடத்தி முடிப்போம் என்று வாக்குறுதி கொடுத்திருந்தார்கள். அப்படியிருந்தும்கூட இப்போது ஒரு வருடம் நிறைவடைந்து அதற்குப் பிறகு நான்கு மாதங்களும் ஆகியும் இன்னமும் மாகாண சபைத் தேர்தலை வைப்பதற்கான அறிகுறி கிடையாது. அதை இழுத்தடிப்பதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. இழுத்தடிப்பை விட்டு மாகாண சபைத் தேர்தல் இருக்கின்ற முறையிலேயே நடத்தப்பட வேண்டும்." – என்றார்.

## நாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக இளம் சிறுவர்களிடையே இந்த வைரஸ் பாதிப்புகள் அதிகரித்துள்ளன என்று சிரேஷ்ட வைத்திய அதிகாரி ரவீந்திர உடகமகே தெரிவித்துள்ளார்.

குளிர் மற்றும் வறண்ட காலநிலை பல்வேறு வைரஸ் தொற்றுகள் விரைவாகப் பரவுவதற்குப் பங்களிப்பதாகவும், இதனால் சுவாசக் குழாய் பாதிப்பு ஏற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, காய்ச்சல், இருமல், சளி, தொண்டை வலி, கடுமையான தலைவலி, தசை வலி, வாந்தி மற்றும் வயிற்றுப் போக்கு ஆகிய அறிகுறிகள் மூன்று நாட்களுக்கு மேல் நீடித்தால் மருத்துவ உதவியை நாட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சட்டமா அதிபரின் பொறுப்பு

சட்டத்தின் ஆட்சிக்கு நீதித்துறை மற்றும் நீதிமன்றங்களின் சுயாதீனமான செயற்பாடு எவ்வளவு தூரம் முக்கியமானதோ, அதே போன்று சட்டமா அதிபர் மற்றும் அவரின் திணைக்களத்தின் சுயாதீனமான - சுதந்திரமான - செயற்பாடும் மிக முக்கியமானதாகும்.

நாட்டின் சார்பில் பிரதான வழக்குத் தொடுநர் அவர்தான். அப்படி வழக்குத் தொடரும் விடயங்களில் அவர் சுதந்திரமாகச் சிந்தித்துச் செயல்பட வேண்டும். அரசாங்கத்தின் ஏவலாளாக அவர் செயல்படக் கூடாது; செயல்பட முடியாது.

உரிய சமயங்களில் ஜனாதிபதிக்கும் அரசுக்கும் ஆலோசனை மற்றும் சட்ட வழிகாட்டல் வழங்கும் பொறுப்பும் கடமையும் அவருக்கு இருந்தாலும், அதற்காக அவர் ஜனாதிபதியினதும் அரசினதும் விருப்பு - வெறுப்புகளுக்கு அமையவே செயல்பட வேண்டும் என்று அரசோ ஜனாதிபதியோ எதிர்பார்க்கக் கூடாது. அப்படி எதிர்பார்த்தால் அது முறையற்ற விவகாரமாகும்.

வழக்குகள் தொடுக்கின்ற விடயத்தில் தமக்கு முன்னால் இருக்கும் சான்றுகள், ஆதாரங்கள், விசாரணை அறிக்கைகள், கோவைகள் போன்றவற்றின் அடிப்படையில்தான் அவர் முடிவெடுப்பார். அரசின் அல்லது அரசுத் தலைமையின் விருப்பு - வெறுப்புக்கு அமைய அல்ல.

அப்படி அரசு தலைமையின் ஊதுகோல்களாக - ஏவல்நாய்களாக - இருந்த சட்டமா அதிபர்கள் பதவியில் இருந்திருக்கலாம். ஆனால் சட்டமா அதிபர் பதவி என்பது தனித்துவமானது. சுயாதீனமானது. சட்டப் பொறுப்பு மிக்கது.

அரசாங்கம் வழக்குத் தொடுக்க விரும்பும் தரப்புகள் எல்லாவற்றுக்கும் எதிராக சட்டமா அதிபர் இணங்கி தலையாட்ட வேண்டும் என்று எதிர்பார்த்தால் அது தவறு. அது - சட்ட முறையற்ற - நீதியற்ற - அணுகுமுறை. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக அவரது லண்டன் விஜயதையொட்டி வழக்குத் தொடுக்க வேண்டும் என்று அரசும், அரசுத் தலைமையும், அரசு தரப்பு ஆதரவாளர்களும் விரும்பினாலும் கூட, இந்த விடயத்தில் சுதந்திரமாக - சுயாதீனமாக - தமக்கு முன்னால் உள்ள சான்றாதாரங்களை உள்வாங்கி முடிவெடுக்க வேண்டியவர் சட்டமா அதிபரே.

ஏற்கனவே இப்பத்தியில் நாம் குறிப்பிட்டபடி, பொலிஸ்மா அதிபர் போல சட்டமா அதிபரையும் நாடாளுமன்றப் பிரேரணை மூலம் பதவி இழக்கச் செய்யலாம். அதற்கான நாடாளுமன்றப் பலம் அரசிடம் தாராளமாக உள்ளது என்பதற்காகத் தான் விரும்பியவற்றை - தாம் எதிர்பார்க்கின்றவற்றை - சுயாதீனப் பொறுப்பில் இருக்கும் சட்டமா அதிபர் ஆற்ற வேண்டும் என்று அரசுத் தரப்பு எதிர்பார்ப்பது முற்றிலும் தவறு.

வழக்குகள் தொடுக்கும் விடயத்திக் ஆட்சித் தலைமையின் அரசியல் நோக்கங்களுக்கு இயைந்து போகும் விதத்தில் தற்போதைய சட்டமா அதிபர் செயற்படுகின்றார் இல்லை என்ற ஒரு குற்றச்சாட்டு உள்ளது. அதற்காக அவர் மீது அபவாதக் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி, அவரைப் பதவியில் இருந்து இறக்குவோம் என்று மிரட்டி - அச்சுறுத்தி - தமக்கு இசைவாக செயல்பட சில தரப்புகள் முயலுகின்றன என்று தெரிகின்றது.

சட்டமா அதிபருக்கு எதிராக இன்று கொழும்பில் இளம் சட்டத்தரணிகள் அணி என்ற பெயரில் முன்னெடுக்கப்பட இருக்கும் போராட்டம் இந்த நோக்கம் கொண்டதாகவே தென்படுகின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசில் நீதித்துறையின் சுயாதீனம் அடிபட்டு போவதற்கான கால்கோள் இன்றைய போராட்டம் மூலம் முன்னெடுக்கப்படப் போகின்றது என்றே தோன்றுகின்றது.

# கிளிநொச்சியில் மனித உரிமைகள் தொடர்பான பயிலரங்கு


















கிளிநொச்சி முடீவுநுஊ வளாகத்தில், நீதி, சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்கான பணியகத்தின் (CPR) முன்னெடுப்பில் மனித உரிமைகள் தொடர்பான பயிலரங்கு நேற்று நடைபெற்றது.

பாதுகாப்பு, சமூக நல்லிணக்கம் மற்றும் நிலையான சமாதானத்திற்குத் தேவைப்படும் அடித்தளமாக மனித உரிமைகள் விளங்குகின்றன. இத்தகைய பயிலரங்குகள் வட மாகாண மக்களுக்கு மிக அவசியமானவை எனும் நோக்கோடு இந்நிகழ்வு, பணியகத்தின் இயக்குநர் அருட்பணி சூ. ஜே. ஜீவரட்ணம் (அ.ம.தி.) அடிகளாரின் தலைமையில், அமல மரித்தியாகிகளின் யாழ் மாகாண முதல்வர் உயர் அருட்திரு போல் ஜெயந்தன் பச்சேக் (அ.ம.தி.) அவர்களின் ஆசீர்வாதத்துடன் இடம்பெற்றது.

அரசுத் துறைகள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களைச் சேர்ந்த பணியாளர்கள், உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட ஏறத்தாழ 50 பேர் இப்பயிலரங்கில் பங்கேற்று பயனடைந்தனர்.

குறிப்பாக, இலங்கையின் வட மாகாணத்தில் நீண்டகாலமாக நிலவி வரும் மனித உரிமைச் சவால்கள், போரின் பிந்தைய சமூகப் பிரச்சினைகள், நில உரிமை, வாழ்வாதார உரிமை, பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு, சட்டத்தின் முன் சமத்துவம் போன்ற விடயங்கள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்நிகழ்வின் முக்கிய நோக்கமாக அமைந்திருந்தது.

பயிலரங்கில் வளவாளர்களாக கலந்து கொண்ட சட்டத்தரணி திருமதி சரண்யா ராசுதன் அவர்கள், மனித உரிமைகள் குறித்த அடிப்படைக் கொள்கைகள், சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள் மற்றும் அவற்றின் நடைமுறைச் செயல்பாடுகள் குறித்து விளக்கமளித்தார்.

அதனைத் தொடர்ந்து, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய இணைப்பாளரான கனகராஜ் அவர்கள், வட மாகாணத்தில் பெறப்படும் மனித உரிமை முறைப்பாடுகள், அவற்றை அணுகும் நடைமுறைகள் மற்றும் பொதுமக்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சேவைகளை எவ்வாறு பயனுள்ளவையாகப் பயன்படுத்தலாம் என்பதையும் எடுத்துரைத்தார்.

மேலும், யாழ்ப்பாண க்யூடெக் நிறுவனத்தின் இயக்குனர் அருட்பணி அன்றோ டேனிசியஸ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

இறுதியில் பங்கு பற்றியவர்களுக்கான சான்றிதாழ்களும் வழங்கப்பட்டன.



# மன்னார் பிரதேச சபையின் அமர்வு; ஆறு உறுப்பினர்கள் வெளிநடப்பு!

## பூட்டிய அறைக்குள் கூட்டம் நடத்தும் தலைவர்

**(மன்னார் நிருபர்)**

மன்னார் பிரதேச சபையின் 8 ஆவது அமர்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம் பெற்ற போது இலங்கைத் தமிழரசு கட்சி மற்றும் சுயேச்சைக் குழு உறுப்பினர் உட்பட ஆறு உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

மக்களால் தேர்வு செய்யப்பட்ட பிரதேச சபை உறுப்பினர்கள் என்ற வகையில் கடந்த ஏழு சபை அமர்வுகளில் தங்களால் முன்வைக்கப்பட்ட எந்த ஒரு அபிவிருத்தி செயல்பாடுகளையும் தவிசாளர் செயல்படுத்தவில்லை என்பன உள்ளிட்ட பல்வேறு குற்றச் சாட்டுக்கள் முன் வைத்தே அவர்கள் வெளி நடப்பு செய்தனர்.

இதேவேளை செய்தி சேகரிக்க ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்படாத நிலையில், பூட்டிய அறையில் இந்த அமர்வு இடம் பெற்றுள்ளது.

வெளி நடப்பு செய்த உறுப்பினர்கள் தெரிவித்தவை வருமாறு:-

சில ஒதுக்கீடுகளும் பாகுபாடு அளவில் செயல்படுத்தஒபடுகின்றன. கிராமங்கள் தோறும் வழங்கப்பட்ட மின் குமிழ்கள் சபை உறுப்பினர்களுக்கு 10 அல்லது 15 தான். ஆனால் தவிசாளர் 61 மின்குமிழ்களை தனது வட்டாரத்தில் பொருத்தியுள்ளார்.

கடந்த புயல் அனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு பிரதேச சபைகளுக்கான அரசாங்க நிதி ஒதுக்கீடு மன்னார் பிரதேச சபைக்கு கிடைக்காமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

மன்னார் பிரதேச சபை பகுதிக்குள் பல்வேறு அனர்த்த சம்பவங்கள் இடம் பெற்றிருந்த போதும் அரச நிதியை பெற்றுக்கொள்ள சேதங்கள் குறித்த கோரிக்கை வைக்கப்படாத காரணத்தினால் நிதி பெறப்படவில்லை.

அரசமட்ட பொதுக்கூட்டங்களுக்கு தவிசாளர் செல்வதில்லை.

அவர் பாகுபாட்டுடன் செயல்படுகின்றார்.

மன்னார் பிரதேச சபை தவிசாளர் மற்றும் உதவி தவிசாளர் உட்பட மொத்தம் 22 உறுப்பினர்கள் உள்ள நிலையில் 8 ஆவது அமர்வில் 17 உறுப்பினர்கள் மட்டுமே சமுகம் அளித்திருந்தனர். அமர்வில் இருந்து தமிழரசு கட்சி உறுப்பினர்கள் ஐவர் மற்றும் சுயேச்சைக் குழு உறுப்பினர் ஒருவர் என 6 உறுப்பினர்கள் தவிசாளரின் அதிருப்தியான நடவடிக்கைகள் காரணமாக வெளிநடப்பு செய்துள்ளோம். -என்று தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மன்னார் பிரதேச சபையின் வேறு உறுப்பினர்கள் சிலரும் இவ்வாறான அதிருப்தியில் இருந்து வருகின்றனர் எனவும், கட்சி ரீதியாக மீறிச் செயல்பட முடியாத நிலை இந்த உறுப்பினர்களுக்குக் காணப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.







# பரு. இராணுவச் சிற்றுண்டிச் சாலையில் புகைத்தல் பொருள்கள் விற்பதற்குத் தடை

## அனுமதி பெறாவிட்டால் மூடவும் பிரதேச சபை தீர்மானம்



(மரியசீலன் திலைக்ஸ்)

பருத்தித்துறை துறைமுகத்திற்கு முன்னாலுள்ள இராணுவ சிற்றுண்டி சாலையில் புகைத்தல் பொருள்கள் வி-ற்பனையைத் தடை செய்வதென்றும், நகர சபையின் உரிய அனுமதிகள் பெறப் படவில்லையேல் அச் சிற்றுண்டி சாலையை மூடுவதற்கு நடவடிக்கை எடுப்பது என்றும் தீர்மானிக்கபட்டுள்ளது.

பருத்தித்துறை நகர சபையின் அமர்வு தவிசாளர் வின்சன் டீ போல் டக்ளஸ் போல் தலைமையில் நேற்றுக் காலை 9:30 மணியளவில் அக வணக்கத்துடன் நகர சபை மாநாட்டு மண்டபத்தில் ஆரம்ப மானது. இதன்போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றபட்டுள்ளது.

கனரக வாகனங்கள் பாடசாலை ஆரம் பிப்பதற்கு முன் காலை 6:45 மணிக்கும், 8:00 மணிவரையும்,

முடிவடையும் நேரத்தில் காலை 12:00 மணிமுதல் 2:00 மணிவரை பயணிக்க தடை விதிப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

புதிய ஜே.சி.பி. இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்வது தொடர்பாக தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் அனல் ரெஜி யினால் கொண்டுவரப்பட்ட யோசனை குறித்து, அதன் தேவைபாடு தொடர்பான ஆய்வுக்குப் பின்னர் அடுத்த கூட்டத்தில் ஆராய்வது என்றும் முடிவு செய்யப்பட்டது.

மேலும் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன:-

# மரக்கறி சந்தை மீண்டும் நவீன சந்தைத் தொகுதிக்கு மாற்றல்பட்டமை யால் ஏற்கனவே குத்தகைக்கு வழங்க பட்டவருக்கு அதை வழங்குவது.

# முனையில் அமைந்துள்ள சிறுவர் மகிழ்வகத்திற்கு வருகை தருவோர்க்கு ரூபா 20/- பணம் அறவீட்டை பரீட் சார்த்தமாக 3 மாதம் வரை அறவிடுவது. மகிழ்வகத்தை காலை 9:00 மணி யிலிருந்து மாலை 9:00 மணிவரையும் திறப்பது.

# முனை வெளிச்ச வீடு திருத்தபட்டு பார்வையாளர்களிடமிருந்து கட்டணம் அறவிடுவது.

# இடையூறாக நிறுத்தப்படும் தனி யார் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் ஊர்திகளுக்கு உடனடி தாண்டமாக ரூபா 2000ஃ- அறவிடுவது

# நகரசபை விதிகளை மீறி வியா பாரதில் ஈடுபடுவோருக்கும், மரக்கறி சந்தையிலிருந்து 500 மீற்றர் தூரத் திற்குள் மரக்கறி மற்றும் சந்தை பொருள்கள் விற்பனை செய்வோர்க்கும் ரூபா 2000 தண்டம் அறவீடு செய்வது, சட்ட நடவடிக்கை எடுப்பது, கைப்பற்ற பட்ட பொருள்களுக்கு உரிய நடவ டிக்கை எடுப்பது.

# நகர சபை எல்லைக்குள் பிறக் கும் குழந்தைகளுக்கு தமிழில் பெயர் சூட்டுவதனை ஊக்கிவிப்பது.

# இரண்டு பிரபல பாடசாலைகள் அருகில் அமைந்துள்ள நிலையில் இராணுவத்தின் சிற்றுண்டி சாலையில் புகைத்தல் விற்பனை செய்வத்தை தடை செய்வது.

# இந்த இராணுவச் சிற்றுண்டிச்சாலை நகரசபை சட்டங்களுக்கு உட்பட்டு உரிய அனுமதி பெறப்படாது இயங்குவதால் அதற்கான உரிய அனுமதி பெறப்பட வில்லை எனில் அந்தச் சிற்றுண்டிச் சாலையை மூடுவதற்கு நடவடிக்கை எடுப்பது.

- இந்த ஆண்டுக்கான புதிய நிதிக் குழு, சுகாதாரக் குழு, பெறுகை குழு உட்பட பல குழுக்களும் நேற்றைய அமர்வில் தெரிவு செய்யப்பட்டன.

15 உறுப்பினர்கள் உள்ள சபையில் நேற்றைய கூட்டத்தில் 14 உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

# யானை – மனித மோதல் வன்னியில் அதிகரிப்பு விரைந்து கட்டுப்படுத்த ரவிகரன் வற்புறுத்தல்!

## நேற்று நாடாளுமன்ற உரையில் கோரிக்கை

**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு – துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் அண்மையில் பொன்முடி சுஜந்தன் என்னும் இளைஞன் காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளமையைச் சுட்டிக்காட்டிய வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராஜா ரவிகரன், வன்னியில் அதிகரித்துள்ள இவ்வாறான யானை – மனித மோதல்களைக் கட்டுப்படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தியுள்ளார்.

அத்தோடு சுற்றாடல் அமைச்சர் வைத்தியர் தம்மிக்க பட்டபெந்தி நேரடியாக முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களுக்கு வருகை தந்து நிலமைகள் தொடர்பில் ஆராய்வதுடன், யானை – மனித மோதல்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்மொள்ளவேண்டுமெனவும் ரவிகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எங்கள் வாழ்வுக்கும் வளமான வாழ்வாதாரத்துக்கும் போருக்குப் பின்னரான காலத்தில் நிலவும் புதிய அச்சுறுத்தலாகவே காட்டு யானை – மனித மோதலை வன்னி நிலம் காண்கிறது.

தொடர்ச்சியாக ஒப்பரிய மனித உயிர்கள் யானை மோதலில் இறப்பது



ஆழ்ந்த வேதனைக்குரியது.

கடந்த 17.01.2026 சனிக்கிழமையன்று அதிகாலை முல்லைத்தீவு – துணுக்காய் பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட தேறாங்கண்டல் பகுதியில் வயல் காவலில் இருந்த பொன்முடி சுஜிந்தன் என்னும் 19வயதான இளைஞன் காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளார்.

கடந்த 2020-2024 வரையான காலப்பகுதியில் காட்டுயானை மோதலில் 739 மக்கள் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 2020-2024 வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நால்வரும் வவுனியா மாவட்டத்தில் பன்னிருவரும் காட்டுயானை மோதலில் உயிரிழந்தனர் என மருத்துவ அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

கடந்த 2009ஆம் ஆண்டிற்கு முன்னர் வன்னியில் புலிகள் இருந்த போது வன்னிக்காட்டிலும் நாட்டிலும் இவ்வாறான காட்டுயானைகள், குரங்குகள் உள்ளிட்ட வனஜீவராசிகளின் அட்டூழியங்கள் இருந்திருக்கவில்லை.

குறிப்பாக சுற்றாடல் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் வனவளத் திணைக்களம் என்பன மக்களின் காணிகளை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டுவருகின்றன.

இருப்பினும் காணி அபகரிப்பில் காட்டுகின்ற அதே அக்கறையை வன ஜீவராசிகள் திணைக்களம், காட்டுயானை – மனித மோதலைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் காட்டுவதில்லை.

இவ்வாறு அதிகரித்துள்ள யானை – மனித மோதல்களைக் கட்டுப்படுத்த சுற்றாடல் அமைச்சு வனஜீவராசிகள் திணைக்களத்தின் ஊடாக விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென இந்த உயரியசபையைக் கோருகின்றேன்.

எனவே சுற்றாடல் அமைச்சர் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களுக்கு வருகை தந்து துறைசார்ந்தவர்களுடனும், பாதிக்கப்பட்டுள்ள மக்களுடனும், மக்கள் பிரதிநிதிகளான எம்மோடும் கலந்துரையாடல்களை மேற்கொண்டு, இந்த யானை – மனித மோதலைக் கட்டுப்படுத்த விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் – என்றார்.

# புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலய பெருவிழா



**(மரியசீலன்-திலைக்ஸ், வடமராட்சி நிருபர் )**

புகழ் பெற்ற யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலய பெரு விழா நேற்று இடம்பெற்றது.

கட்டைக்காடு பங்குத்தந்தை வசந்தன் அடிகளார் தலைமையில் நேற்றுக் காலை 6.00 மணியளவில் திருச் செபமாலையுடன் பெருவிழா திருப்பலி ஆரம்பமானது.

பெருவிழா திருப்பலியை யாழ் மறை மாவட்டத்தின் முதன்மை குருக்களில் ஒருவரான அருட்தந்தை எட்வின் நாதன் ஒப்புக் கொடுத்தார்.

புல்லாவெளி புனித செபஸ்தியார் பெருவிழாவில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரி மற்றும் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

பெருவிழா திருப்பலியின் இறுதியில் செபஸ்தியார் விருந்து பரிமாறப்பட்டது.

பெரு விழாவின் இரு நாள்களும் பாதுகாப்புக் கடமைகளில் மருதங்கேணி பொலிஸார் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.





### இலங்கையில் 79 வது சுதந்திர தினத்தையொட்டி

# மன்னாரில் இருந்து சக்கர நாற்காலியில் இலங்கை முழுவதற்கும் சுற்றுப் பயணம்

## மாற்றுத் திறனாளி இளைஞனின் துணிகர முயற்சி ஆரம்பம்

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னாரில் இருந்து சக்கர நாற்காலியில் இலங்கை முழுவதற்குமான சுற்றுப் பயணம் என்ற துணிகர முயற்சி ஒன்றை மாற்றுத் திறனாளி இளைஞரான வவுனியா சூடுவந்த குளம் பகுதியைச் சேர்ந்த மக்கின் முகமது அலி என்பவர் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8.45 மணி அளவில் ஆரம்பித்துள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மன்னார் வந்த இந்த இளைஞன் தனது பயணம் தொடர்பான விளக்கத்தை மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனைச் சந்தித்துத் தெரியப்படுத்திக் கொண்டார்.

இந்த நிலையில் நேற்று செவ்வாய்க் கிழமை காலை 8.45 மணி அளவில் மன்னார் பஜார் பகுதியில் உள்ள தந்தை செல்வாவின் சிலைக்கு முன்பாக இருந்து தனது பயணத்தை அவர் ஆரம்பித்துள்ளார்.

இலங்கையின் 79 ஆவது சுதந்திர தினத்தையொட்டியும், சில கோரிக்கைகளை முன் வைத்தும் சக்கர நாற்காலியில் இலங்கை முழுவதும் சுற்றுப்பயணம் செய்யும் துணிகர முயற்சியையே அவர் ஆரம்பித்துள்ளார்.

வடமாகாண சக்கர நாற்காலி கிரிக்கெட் அணியின் தலைவரான மக்கின் முகமது அலி தொடர்ச்சியாக கடந்த காலங்களில் இத்தகைய பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ளார்.

இந்தப் பயணத்துக்கான நோக்கங்களை அவர் விளக்கினார்.

# நாட்டில் ஏற்பட்ட அனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்காகப் பல்வேறு நாடுகளும் புலம் பெயர் உறவுகளும் மனிதாபினான உதவிகளை மேற்கொண்டுள்ளன. அத்தரப்புகளுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்ளுதல்.

# இலங்கை மக்கள் அனைவரும் அனர்த்தத்தின் போது எவ்வித வேறுபாடுகள் இன்றி ஒருவருக்கு ஒருவர் உதவிகளை மேற்கொண்டுள்ளனர். இந்த நிலையில் இலங்கை நாட்டு மக்களிடையே உள்ள ஒற்றுமையையும், சமூக நல்லெண்ணத்தையும் வலியுறுத்துதல்.

# படித்த மாற்றுத்திறனாளிகள் வேலை வாய்ப்புகள் இன்றி முடங்கியுள்ளனர். அவர்களுக்கான வேலை வாய்ப்புகளையும் அரசாங்கம் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தல்.

- இது போன்ற விடயங்களை முன்வைத்து இந்தப் பயணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை முழுவதும் சுமார் 1,500 கிலோ மீற்றருக்கும் அதிகமான கடற் கரையோரமாக இந்தச் சுற்றுப் பயணம் முன்னெடுக்கப்படுகின்றது.

எனவே இந்த முயற்சிக்கு மக்கள் தமது ஆதரவை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை நேற்று செவ்வாய்க் கிழமை காலை 8.45 மணி அளவில் தனது பயணத்தை ஆரம்பித்த போது அவர் தெரிவித்தார்.



















# தாளையடி அந்தோனியார் ஆலயப் பங்கின் குருமனைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு

(மரியசீலன் திலைக்ஸ்)

யாழ். மறைவாட்ட தாளையடி புனித அந்தோனியார் ஆலய பங்கின் குரு மனைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ஜெபரட்டணம் அடிகளார் தலைமையில் நேற்று முற்பகல் 10.00 மணியளவில் தாளையடி புனித அந் தோனியார் ஆலயத்தில் அடிக்கல் நாட்டும் நிகழ்வு ஆரம்பமானது.

திருச்செபமாலையுடன் தாளையடி புனித அந்தோனியார் ஆலய பங்கின் குருமனைக்கான அடிக்கல்லை குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் நாட்டி வைக்க அதனைத் தொடர்ந்து தாளையடி பங்குத்தந்தை ஆதர் ஜஸ்ரின் மற்றும் ஏனைய அருட்தந்தையர்கள். அருட் சகோதரிகளாலும் அடிக்கல் நாட்டிவைக் கப்பட்டது.

இந்நிகழ்வில் தாளையடி பங்கு மக்கள் அதிக எண்ணிக்கையானோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.










# தரம் 6 ஆங்கிலப் பாடப்புத்தகத்தில் இடம்பெற்ற பிழையைத் திருத்தி சீர்திருத்தத்தை தொடருங்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்தல்



தரம் 6 ஆங்கிலப் பாடப்புத்தகத்தில் இடம்பெற்ற பொருத்தமற்ற இணையதள முகவரி குறித்த சர்ச்சை, முழு கல்வி சீர்திருத்தச் செயல்பாட்டின் மீதும் அதிக கவனத்தை ஈர்த்துள்ளது.

இந்நிலையில், பாடப்புத்தகத்தில் உள்ள பிழையைத் திருத்திவிட்டு, சீர் திருத்தங்களைத் தாமதமின்றி முன் னெடுத்துச் செல்ல வேண்டும் என எதிர்க் கட்சியினர் சஜித் பிரேமதாஸ வலியுறுத் தியுள்ளனர்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேம தாஸ நேற்று நாடாளுமன்றில் இந்த வலி யுறுத்தலை விடுத்தார்.

இதன்போது அவர் மேலும் தெரி விக்கையில்,

“இந்தக் கல்விச் சீர்திருத்தங்களை முன்னெடுக்குமாறு ஐக்கிய மக்கள் சக் தியே ஆரம்பித்தில் இருந்து கூறி வந் தது. ஆங்கிலம், ஜப்பான், சீன மற்றும் இந்தி போன்ற மொழிக் கல்வி மற்றும் தகவல் தொழிநுட்பம் போன்ற கல்விகள் தொடர்பில் நாம் பிரஸ்தாபித்த சமயங்க ளில், பிரபஞ்சம் வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுத்து வந்த சந்தர்ப்பங்க ளில் தற்போதைய ஆளும் தரப்பினரே கண்ணை மூடிக்கொண்டு எம்மை விமர் சித்தனர்.

அன்று இவ்வாறு சொன்னவர்கள் இப்போது கல்விச் சீர்திருத்தங்களில் ஆபாசமான விடயங்களைக் கொண்டு வந்து, இறுதியில் அரசாங்கமே இவற்றை இடை நிறுத்தி விட்டு, பெற்றோரைப் பயன் படுத்திக் கொண்டு இந்தச் சீர்திருத்தங் களை முன்னெடுக்குமாறு இப்போது தெரி வித்து வருகின்றனர்.

சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி கோயபல்ஸ் கோட்பாட்டையே இந்த அர சாங்கம் இப்போது செய்து கொண்டிருக் கின்றது. கல்விச் சீர்திருத்தங்களை முன் னெடுப்பதற்கு நாம் ஆதரவு தெரிவிக்கி றோம். ஆனால் கல்வியை ஆபாசமயப் படுத்தும், கல்வியில் ஆபாசத்தை புகுத் தும் நடவடிக்கைகளை நாம் எதிர்க்கி றோம்.

தரம் 1- 6 வரையிலான கல்விச் சீர் திருத்தங்களை முன்னெடுக்க வேண்டாம் என்று எதிர்க்கட்சி ஒருபோதும் கூற வில்லை. அரசாங்கத்தால் ஆரம்பிக் கப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களின் ஆங் கில மொழி பாட அலகொன்றில் ஆபாச வலைத்தளமொன்று உட்சேர்க்கப்பட் டுள்ளது. இதனை எதிர்க்கட்சி செய்ய வில்லை. அரசாங்கம்தான் இதனைச் செய்தது. 1- 6 வரையிலான தரங்களுக்கு இந்த கல்விச் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டபோது இதற்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

6 ஆம் தர ஆங்கில பாட அலகொன் றில் ஆபாச வலைத்தளமொன்று சேர்க்கப் பட்டதாலேயே இந்த எதிர்ப்பை வெளிப்ப டுத்தினோம். இறுதியில், ஜனாதிபதியால் இந்த சீர்திருத்தங்கள் ஒரு வருடத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. தொழில்நுட்ப சிக்கல்கள் மற்றும் ஆசிரியர் பயிற்சி தொடர்பிலான பிரச்சினைகள் காரண மாக, 2027 முதல் இதனை முன்னெ டுப்போம் என்று ஜனாதிபதி கூறியுள் ளார்.

இந்த சீர்திருத்தங்களை முறை யாக முன்னெடுக்குமாறே எதிர்க்கட்சி கோரிக்கை விடுக்கின்றது. ஆபாச வலைத் தளங்களை உட்சேர்ப்பது அரசாங்கத் தில் இருக்கும் யாரினதும் தனிப்பட்ட விருப்பமாக இருந்தாலும் கூட, அது அர சின் கொள்கையாக அமைந்து விடக் கூடாது.

இந்த வலைத்தளத்தை சேர்ப்பதற்கு சமூகத்தில் பெரும் எதிர்ப்பு கிளம்பி இருந்தும், இதனைப் பொருள்படுத்தாது, இவர்கள் இதனை அச்சிட்டு, விநியோ கித்து, பெருமளவிலான பணத்தை விர யம் செய்து விட்டு, இந்த தவறை எதிர்க் கட்சியின் மீது சுமத்த அரசாங்கம் முயற் சிக்கின்றது.” - என்றார்.

# சிறைச்சாலை நெரிசலை குறைக்க நடவடிக்கை: சீர்திருத்தத்திற்கு உட்படுத்தப்பட்ட 17,000 பேர்



பல்வேறு குற்றங்களுடன் தொடர்பு டைய சந்தேகநபர்கள் சிறைகளில் அடைக் கப்படுவதைக் குறைக்கும் நோக்கில் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து நீதி அமைச்சர் ஹர்ஷன நாண யக்கார விளக்கம் அளித்துள்ளார்.

இதன்படி கடந்த ஆண்டில் பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 17,000 சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்னர், அவர்கள் சமூக சீர்திருத்த நடைமுறைக்கு உட்படுத்தப் பட்டனர்.

இந்த நபர்கள் சிறைச்சாலைகளுக்கு வெளியே தடுத்து வைக்கப்பட்டு, முறை யான கண்காணிப்பின் கீழ் வைக்கப் பட்டிருந்தனர்.

சிறைச்சாலைகளில் நிலவும் அதிக படியான இடநெருக்கடியைத் தவிர்ப்பதற் காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட் டது.

இந்த ஆண்டில் சமூக சீர்திருத்தத் திற்கு பரிந்துரைக்கப்படும் நபர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சமிந் தாணி கிரியெல்ல எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் ஹர் ஷன நாணயக்கார இந்த விபரங்களை வெளியிட்டார்.

# சட்டமா அதிபரின் சுதந்திரத்தை பாதுகாக்குமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தல்

சட்டமா அதிபரின் அதிகாரங்களைப் பயன்படுத்துவதில் எவ்வித தேவையற்ற தலையீடுகளும் இருக்கக்கூடாது என்பதை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தினதும் சட்ட அமுலாக்க நிறுவனங்களது கடமையாகும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அண்மைய நாட்களில் சமூக ஊடகங்களில் சட்டமா அதிபரைக் குறிவைத்து வெளியிடப்பட்டு வரும் பதிவுகளுக்குப் பதிலளிக்கும் வகையில் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதில்சட்டமாஅதிபர்திணைக்களம்போன்ற முக்கிய நிறுவனங்களின் சுதந்திரம் மிக அவசியமானது.

இதனைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். சமூக ஊடகங்களில் பகிரப்படும் இத்தகைய பதிவுகள், சட்டமா அதிபர் அலுவலகத்தின் சுதந்திரத்தில் தலையிடுவதற்கான ஒரு நியாயமற்ற முயற்சி என்று சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

சட்டமா அதிபரின் பணிகள் குறித்து அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, குற்றவியல் விவகாரங்களில் சட்டமா அதிபர் ஒரு நீதித்துறை சார்ந்த பணியையே ஆற்றுகிறார்.

புலனாய்வுப் பிரிவினரால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களின் அடிப்படையில், ஒரு சந்தேக நபருக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய முடியுமா என்பதை அவர் தீர்மானிக்கிறார்.

இந்தச் செயல்முறையின் போது, அந்த ஆதாரங்கள் சட்டப்பூர்வமானவையா மற்றும் குற்றச்சாட்டுகளை நிரூபிக்க போதுமானவையா என்பதை அவர் மதிப்பீடு செய்கிறார்.

சட்டமா அதிபரின் முடிவுகள் இறுதியானவை அல்ல. அவை நீதிமன்றத்தில் எழுத்தாணை மனுக்கள் மூலமாகவோ அல்லது உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மூலமாகவோ நீதித்துறை மறுஆய்வுக்கு உட்படுத்தப்படலாம் எனச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

நீதி மற்றும் சுதந்திரத்தின் கொள்கைகளை நிலைநாட்ட, எவ்வித வெளிப்புற அழுத்தங்களும் இன்றி சட்டமா அதிபர் அலுவலகம் சுயாதீனமாக இயங்க அனுமதிக்கப்பட வேண்டும் என்று அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# வீதி விபத்துகள் காரணமாக 19 நாள்களில் 120 பேர் பலி



இலங்கையில் இந்த ஆண்டு ஆரம்பம் முதல் ஜனவரி 19 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்துகள் குறித்த அதிர்ச்சியூட்டும் தகவல்களை பொலிஸ் வெளியிட்டுள்ளது.

போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதிப் பாதுகாப்புப் பொறுப்பதிகாரியான பிரதி பொலிஸ் மா அதிபர் டபிள்யூ.பி.ஜே. சேனாதீர நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த தரவுகளை வெளியிட்டார்.

இதன்படி இலங்கையில் இந்த ஆண்டு தொடக்கத்திலிருந்து ஜனவரி 19 வரையான காலப்பகுதியில் 113 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன. இதில் 120 பேர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸ் தெரிவித்துள்ளது.

அத்துடன், 216 பேர் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். 490 சிறு விபத்துக்களும் பதிவாகியுள்ளன.

மேலும் விபத்துகள் காரணமாக 159 சொத்து சேத சம்பவங்கள் பதிவாகியுள்ளன. விபத்துகளில் உயிரிழந்தவர்களில் பாதசாரிகளும் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

தொடர்ந்து அதிகரித்து வரும் விபத்துகளைக் கட்டுப்படுத்த வீதிப் பாதுகாப்புச் சட்டங்களை மிகக் கடுமையாக நடைமுறைப்படுத்தவும், பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தவும் பொலிஸ் தீர்மானித்துள்ளது.




# அரசாங்க வாகனங்களுக்கு டிஜிட்டல் எரிபொருள் அட்டை

அரச வாகனங்களுக்கு எரிபொருள் விநியோகிக்கும் முறையில் பாரிய மாற்றத்தைக் கொண்டு வரும் நோக்கில், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் புதிய டிஜிட்டல் எரிபொருள் அட்டை முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

அரச வாகனங்களுக்கான எரிபொருள் விநியோகத்தில் வினைத்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறலை மேம்படுத்தும் நோக்கில் இந்த திட்டம் டிஜிட்டல் பொருளாதார அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

புதிய முறையின் கீழ், அரசாங்கத்திற்கு சொந்தமான வாகனங்களுக்கு ஒரு சிறப்பு டிஜிட்டல் எரிபொருள் அட்டை வழங்கப்படும்.

இதன் மூலம் நாட்டிலுள்ள எந்தவொரு எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்தும் எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

எரிபொருள் வீணாதல், மோசடிகள் மற்றும் ஒழுங்கற்ற செயற்பாடுகளைக் குறைப்பதே இதன் பிரதான நோக்கமாகும்.

மேலும் இந்த அமைப்பு அரச நிறுவனங்களால் எரிபொருள் பயன்பாட்டைத் துல்லியமாகக் கண்காணித்து அறிக்கையிடவும் உதவும் என்று அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த டிஜிட்டல் மயமாக்கல் மூலம் அரச வளங்கள் முறையாக முகாமைத்துவம் செய்யப்படுவதுடன், எரிபொருள் இழப்புகள் குறைக்கப்பட்டு தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.



# வாகன இறக்குமதியில் இருமடங்கு வருமானம்

வாகன இறக்குமதி மூலம் அரசாங்கம் எதிர்பார்த்ததை விட இருமடங்கு வருமானத்தைப் பெற்றுள்ளதாகப் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் நிஷாந்த ஜயவீர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதியமைச்சர் இதனை குறிப்பிட்டார்.

வாகன இறக்குமதி மூலம் அரசாங்கம் மொத்தம் 904 பில்லியன் ரூபாயை வருமானத்தை ஈட்டியுள்ளது.

ஆரம்பத்தில் 441 பில்லியன் ரூபாய் வருமானமே எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், தற்போது இலக்கை விட இருமடங்கிற்கும் அதிகமான வருமானம் கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.



# கொழும்பு - சிங்கப்பூர் இடையே வாரத்திற்கு 10 விமான சேவைகள்

கொழும்பு மற்றும் சிங்கப்பூர் இடையிலான தனது விமான சேவைகளை சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் விரிவுபடுத்தியுள்ளது.

இதன்படி ஜனவரி 6 முதல் அமுலுக்கு வரும் வகையில் மூன்று புதிய பகல்நேர விமான சேவைகளை அந்த நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இலங்கைக்கும் சிங்கப்பூர் ஏர்லைன்ஸின் உலகளாவிய வலையமைப்பிற்கும் இடையிலான வான்வழித் தொடர்பை வலுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய இந்த விமான சேவையானது வாரத்தின் செவ்வாய், வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இயக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய இணைப்புகளுடன், சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் தற்போது கொழும்பு மற்றும் சிங்கப்பூர் இடையே வாரத்திற்கு மொத்தமாக 10 விமான சேவைகளை முன்னெடுக்கின்றது.

இந்த விரிவாக்கப்பட்ட கால அட்டவணை பயணிகளுக்கு அதிக நெகிழ்வுத்தன்மையையும் வசதியையும் வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சிங்கப்பூரின் சாங்கி விமான நிலையத்தின் ஊடாக ஆசியா, அவுஸ்திரேலியா, ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு செல்லும் பயணிகளுக்கு இது ஒரு முக்கிய நுழைவாயிலாக அமையும் என தெரிவிக்கப்படுகின்றது.

# கல்வி நடவடிக்கைகளுக்காக இன்று பாடசாலைகள் திறப்பு



உயர்தரப் பரீட்சை காரணமாக மூடப்பட்டிருந்த அரச பாடசாலைகள் இன்று முதல் மீண்டும் திறக்கப்படவுள்ளன.

இதன்படி, இந்த ஆண்டு பாடசாலையின் முதலாம் தவணையின் முதல் கட்ட கற்றல் செயற்பாடுகள் இன்று முதல் அடுத்த மாதம் 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதேவேளை க.பொ.த சாதாரண தரப் பரீட்சை காரணமாக பெப்ரவரி 14 ஆம் திகதி முதல் மார்ச் 02 ஆம் திகதி வரை மீண்டும் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படும்.

அதே நேரத்தில் முதலாம் தவணையின் இரண்டாம் கட்டம் மார்ச் 03 ஆம் திகதி முதல் ஏப்ரல் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஆளுநர் உரை நடைமுறையை மாற்ற சட்டத் திருத்தத்தை முன்னெடுப்போம்

## முதல்வர் ஸ்டாலின் உறுதி

ஆண்டின் தொடக்கத்தில் ஆளுநர் உரை என்ற நடைமுறையை மாற்று வதற்கான அரசியலமைப்பு சட்டத் திருத் தத்தை தி.மு.க. முன்னெடுக்கும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

சட்டப்பேரவையின் ஆண்டு முதல் கூட்டம் நேற்று தொடங்கிய நிலையில், ஆளுநர் ஆர்.என்.ரவி உரையை வாசிக் காமல் வெளியேறினார். இதையடுத்து, முதல்வர் ஸ்டாலின், ஆளுநர் உரை தொடர்பான தீர்மானத்தை கொண்டு வந்து பேசுகையில்,

“மீண்டும் ஒருமுறை ஆளுநர் சட்ட விதிகளையும், மரபுகளையும் மீறி யுள்ளார். இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி, ஆளுநர் உரை என்பது மாநில அரசால் தயாரிக்கப்பட்டு, ஆளுநரால் முழுமையாகப் படிக்கப்பட வேண்டும். ஆளுநர் சொந்த கருத்துகளைத் தெரிவிக் கவோ, நீக்கவோ சட்டத்தில் இடமில்லை.

அரசமைப்புச் சட்டத்தில் ஆளுநர் உரை தொடர்பான தெளிவுரைகளைக் கேட்க அவருக்கு வழியில்லாவிட்டாலும், ஆளுநர் கோரிய விளக்கங்களுக்கு தமிழக அரசு பதில் அளித்துள்ளது. இந்நிலையில், வேண்டுமென்றே அரசி யலமைப்பை ஆளுநர் மீறியுள்ளார். நூற் றாண்டுகால மரபும், பாரம்பரியமும் கொண்ட மக்கள் சபையை, அதன் மாட் சிமையை ஆளுநர் செயல்பாடுகள் அவமதிக்கின்றன.

ஆளுநர் என்பவர் மாநில நலனில் அக்கறையும், மக்கள் மேம்பாட்டில் ஆர்வ மும் கொண்டவராக, உண்மையைப் பேசு பவராக இருக்க வேண்டும். மாநில அரசு எடுக்கும் முடிவுகளுக்கு ஒத்துழைப்ப வராக இருக்க வேண்டும். ஆனால், ஆளு நர் அதற்கு நேர்மாறாக செயல்படுகிறார். மாநில நிர்வாகத்தை முடக்கவும், பொது மேடைகளில் அரசியல் பேசியும் அவ தூறு பரப்புகிறார்.

ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்ட உரை, இங்கு ஆளுநரால் படிக்கப்பட்ட தாக பேரவை கருதுகிறது. மரபுவழி நிகழ் வுகள், பேரவைத் தலைவரால் படிக்க வுள்ள ஆளுநர் உரையின் தமிழாக்கம் மற்றும் நான் முன்மொழிகின்ற தீர்மா னம் ஆகியவை மட்டும் பேரவை நடவ டிக்கை குறிப்பில் இடம் பெறலாம். இவ் வாறு பேசிய முதல்வர் ஸ்டாலின், இது குறித்த தீர்மானத்தை முன்மொழிந்தார்.

இதையடுத்து, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. இதற்கு நன்றி தெரி வித்து முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: பல மாநிலங்களிலும் ஆளுநர்கள், ஆளும் அரசுக்கு இடைஞ்சலாக இருப் பது தொடர்கிறது. ஆண்டின் தொடக்கத் தில் அரசின் கொள்கை அறிக்கை வாசிக் கும் நடைமுறையை தொடர்ந்து மீறும் போது, அதுபோன்ற விதிகளை எதற்காக வைக்க வேண்டும் என்ற கேள்வி எழு கிறது.

எனவே, ஆளுநர் உரை என்ற நடை முறையை விலக்கும் வகையில் அரசியல மைப்பு சட்டத்தில் திருத்தம் கொண்டு வரும் முயற்சிகளை, ஒருமித்த கருத்து களைக் கொண்ட கட்சிகளின் துணையு டன் நாடாளுமன்றத்தில் தி.மு.க முன் னெடுக்கும்.” என்று தெரிவித்தார்.

# அலுவலகத்தில் பெண்களுடன் நெருங்கிய தொடர்பு; மூத்த இந்திய பொலிஸ் அதிகாரி திடீர் பதவி நீக்கம்!





தனது அலுவலகத்தில் பெண்கள் சிலருடன் நெருங்கிய தொடர்பில் இருந் ததைக் காட்டும் காணொலிகள் சமூக ஊடகங்களில் வெளியானதைத் தொடர்ந்து பொலிஸ் தலைமை பணிப் பாளர் அந்தஸ்துள்ள மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவரை கர்நாடக அரசு நேற்று பதவி நீக்கம் செய்தது.

இவ்வாறு பதவி நீக்கம் செய்யப்பட்ட வர் டி.ஜி.பி. ராமச்சந்திர ராவ் ஆவார்.

பொது அலுவலகத்தில் டி.ஜி.பி. அந் தஸ்தில் உள்ள அதிகாரியின் நடத்தை குறித்து அதிகரித்து வரும் சர்ச்சைகள் மற்றும் பொதுமக்களின் சீற்றத்திற்கு மத்தியில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்த சர்ச்சை கர்நாடக முதல்வர் சித்தராமையாவின் அலுவலகத்தை எட்டியதும், அவர் திங்களன்று சம்பந்தப் பட்ட துறையிடமிருந்து ஒரு அறிக்கை யைப் பெற்றார்.

ஒரு நாள் கழித்து, அதாவது நேற்று மாநில நிர்வாகம் மூத்த பொலிஸ் அதிகா ரியை இடைநீக்கம் செய்ய முடிவு செய் தது.

சர்ச்சைக்கு மத்தியில், இந்த விடயத் தைப் பற்றி விவாதிக்க ராமச்சந்திர ராவ் இந்திய உள்துறை அமைச்சரையும் சந்தித்தார்.

எனினும், அந்த சந்திப்பு அவரது இடை நீக்கத்தைத் தடுக்க முடியவில்லை.

## பிச்சை எடுப்பவர் கோடீஸ்வரரா?:

# சொத்துக்களைக் கண்டு மிரண்டு போன அதிகாரிகள்





பிச்சைக்காரர்கள் இல்லாத நகரத்தை உருவாக்கும் நோக்கில் மத்தியப் பிரதேச மாநிலம் இந்தூரில் அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கையின் போது, பல லட்சம் ரூபா சொத்துக்களுக்கு அதிபதியான பிச்சைக்காரர் ஒருவர் கண்டறியப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறையினர் வீதிகளில் பிச்சை எடுப்பவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, இரும்பு ரிக்சா வண்டி ஒன்றில் அமர்ந்து பிச்சை எடுத்துக் கொண்டிருந்த "மங்கிலால்" என்ற மாற்றுத்திறனாளியை மீட்டனர்.

அவரிடம் நடத்தப்பட்ட முதற்கட்ட விசாரணையில் வெளிவந்த உண்மைகள் அதிகாரிகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளன.

அதாவது, மங்கிலாலுக்கு பகத்சிங் நகரில் மூன்று அடுக்கு மாடி வீடு ஒன்றும், சிவ் நகரில் 600 சதுர அடி பரப்பளவு கொண்ட மற்றொரு வீடும் சொந்தமாக உள்ளன.

மேலும், மங்கிலால் ஒரு Swift Dzire சிற்றூந்தை சொந்தமாக வைத்துள்ளார்.

வியப்பிற்குரிய விஷயம் என்னவென்றால், அந்தச் சிற்றூந்தை ஓட்டுவதற்கு அவர் மாதாந்த வேதனத்திற்கு ஒரு ஓட்டுநரையும் பணியமர்த்தியுள்ளார்.

பிச்சை எடுப்பதன் மூலம் ஒரு நாளைக்கு (இந்திய மதிப்பில்) 500 முதல் 1000 ரூபா வரை ஈட்டும் இவர், அந்தப் பணத்தைக் கொண்டு அதிக வட்டிக்குக் கடன் கொடுக்கும் தொழிலையும் செய்து வருகிறார். இதற்காக வாராந்திர மற்றும் தினசரி வட்டியை வசூலித்து வந்துள்ளார்.

ஏற்கனவே பல வீடுகள் இருந்தும், தனது உடல் ஊனத்தைக் காட்டி "பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா" திட்டத்தின் கீழ் மற்றொரு வீட்டையும் பெற்றுள்ளார்.

மேலும் மூன்று முச்சக்கர வண்டிகளை வாடகைக்கு விட்டு வருமானம் ஈட்டி வருகிறார்.

இந்நிலையில், தகுதியற்ற ஒருவருக்கு எவ்வாறு அரசுத் திட்டத்தின் கீழ் வீடு வழங்கப்பட்டது என்பது குறித்தும், அவரது சட்டவிரோத வருமானம் குறித்தும் அதிகாரிகள் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## டியாகோ கார்சியா விவகாரம்:

# பிரித்தானியாவின் தீர்மானத்தை 'முட்டாள்தனம்' என்கிறார் ட்ரம்ப்






இந்து சமுத்திரத்தில் உள்ள முக்கியத்துவம் வாய்ந்த சாக்கோஸ் தீவுகளின் இறையாண்மையை மொரிஷியஸிடம் ஒப்படைக்க பிரித்தானியா எடுத்துள்ள முடிவை, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடுமையாக விமர்சித்துள்ளார்.

இதனை ஒரு "மிகப்பெரிய முட்டாள்தனம்" என்று அவர் வர்ணித்துள்ளார்.

தனது ட்ரூத் சோஷியல் தளத்தில் பதிவிட்டுள்ள ட்ரம்ப், இந்தப் போக்கு அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று குறிப்பிட்டுள்ளார்.

சாக்கோஸ் தீவுகளில் ஒன்றான "டியாகோ கார்சியா" தீவில் மிக முக்கியமான அமெரிக்க இராணுவத் தளம் அமைந்துள்ள நிலையில், எந்த காரணமும் இன்றி அதனை மொரிஷியஸிடம் ஒப்படைப்பது பலவீனமான செயல் என அவர் கூறியுள்ளார்.

மேற்குலக நாடுகளின் இத்தகைய பின்வாங்கல் போக்கை சீனா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகள் கவனித்துக் கொண்டிருப்பதாகவும், இது அவர்களின் ஆதிக்கத்திற்கு வழிவகுக்கும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

பிரித்தானியா தனது நிலப்பரப்பை விட்டுக்கொடுப்பது போன்ற முட்டாள்தனமான முடிவுகளால்தான், பாதுகாப்பு கருதி அமெரிக்கா "கிரீன்லாந்து" போன்ற பகுதிகளைக் கைப்பற்ற வேண்டிய தேவை எழுந்துள்ளதாக அவர் ஒப்பிட்டுப் பேசியுள்ளார்.

சாக்கோஸ் தீவுக்கூட்டம் பல தசாப்தங்களாக பிரித்தானியாவின் கட்டுப்பாட்டில் இருந்தது. அங்குள்ள மிகப் பெரிய தீவான டியாகோ கார்சியாவில் அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவின் கூட்டு இராணுவத் தளம் இயங்கி வருகிறது.

நீண்டகால இராஜதந்திர அழுத்தங்களுக்குப் பிறகு, 2025 ஆம் ஆண்டு மே மாதம் பிரித்தானியா அந்தத் தீவுகளின் இறையாண்மையை மொரிஷியஸிடம் வழங்கச் சம்மதித்தது.

இருப்பினும், டியாகோ கார்சியாவில் உள்ள இராணுவத் தளத்தை அடுத்த 99 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து பயன்படுத்தும் வகையில் பிரித்தானியா குத்தகை ஒப்பந்தம் செய்துள்ளது.

இந்நிலையில், ட்ரம்ப்பின் விமர்சனங்களுக்கு பதிலளித்துள்ள பிரித்தானிய அரச தரப்பு, இந்த ஒப்பந்தம் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவே செய்யப்பட்டது என்று கூறியுள்ளது.

சர்வதேச நீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் சட்ட சிக்கல்களால் இராணுவத் தளத்தின் எதிர்காலத்திற்குப் பாதிப்பு ஏற்படாமல் இருக்கவே இந்தத் தீர்வு எட்டப்பட்டதாக பிரித்தானிய அரசு விளக்கமளித்துள்ளது.

இருப்பினும், பிரித்தானிய எதிர்க்கட்சிகள் பலவும் ட்ரம்ப்பின் கருத்தை ஆதரித்துள்ளதுடன், இந்த ஒப்பந்தம் பிரித்தானியாவின் செல்வாக்கைக் குறைக்கும் என்றும் கவலை தெரிவித்துள்ளன.





# ஐ.நா. அலுவலகத்தை அகற்றியது இஸ்ரேல்

## இடித்து அழிப்பு

ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு ஜெருசலேமில் உள்ள பாலஸ்தீனிய ஏதிலிகளுக்கான ஐக்கிய நாடுகளின் நிவாரண முகவரகத்தின் தலைமையகத்தை இஸ்ரேலியப் படைகள் நேற்று இடிக்கத் தொடங்கின.

காசா மற்றும் மேற்குக்கரையில் மனிதாபிமான உதவிகளை வழங்கி வரும் முக்கிய அமைப்புகள் மீது இஸ்ரேலிய அரசாங்கம் மேற்கொண்டு வரும் கடுமையான ஒடுக்குமுறையின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை பார்க்கப்படுகிறது.

நேற்று அதிகாலை 7 மணி அளவில், புல்டோசர்களுடன் வந்த இஸ்ரேலிய இராணுவக் குழுவினர், ஷேக் ஜர்ரா பகுதியில் உள்ள குறித்த தலைமையகத்தை முற்றுகையிட்டனர்.

அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள வீதிகளை மூடிவிட்டு, அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றிய பிறகு, வளாகத்திற்குள் இருந்த கட்டடங்களை இடிக்கத் தொடங்கியதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தினர் அங்கு பணியாற்றிய ஊழியர்களின் கைபேசி மற்றும் கணினி போன்ற இலத்திரனியல் சாதனங்களை வலுக்கட்டாயமாகப் பறிமுதல் செய்ததாக பாலஸ்தீனிய ஏதிலிகளுக்கான ஐக்கிய நாடுகளின் நிவாரண முகவரகம் அதிகாரப்பூர்வமாகத் தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கையை “முன்னெப்போதும் இல்லாத அளவிலான அப்பட்டமான தாக்குதல்“ என்று அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து பாலஸ்தீனிய ஏதிலிகளுக்கான ஐக்கிய நாடுகளின் நிவாரண முகவரகம் விடுத்துள்ள அறிக்கையில், “இந்தத் தாக்குதல் தங்களது அமைப்பு மற்றும் அதன் வளாகத்தின் மீதானது மட்டுமல்ல இது சர்வதேசச் சட்டங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் சலுகைகள் மற்றும் பாதுகாப்பிற்கு எதிரான ஒரு தீவிரமான விதிமீறலாகும்,” என்று கவலை தெரிவித்துள்ளது.

மேலும், அந்த அமைப்பின் தலைவர் பிலிப் லாஸாரினி இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், இது சர்வதேச சட்டங்களை இஸ்ரேல் அப்பட்டமாக மீறுவதைக் காட்டுகிறது என்றும், இன்று தங்களது அமைப்புக்கு நடப்பது நாளை வேறு எந்த சர்வதேச அமைப்பிற்கும் நடக்கலாம் என்றும் எச்சரித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டு ஒக்டோபரில் இஸ்ரேலிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்படி, பாலஸ்தீனிய ஏதிலிகளுக்கான ஐக்கிய நாடுகளின் நிவாரண முகவரகத்தின் செயல்பாடுகள் இஸ்ரேலிய நிலப்பரப்பில் தடை செய்யப்பட்டன.

அந்தச் சட்டத்தை அமுல்படுத்தும் வகையிலேயே இந்த இடிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் அமைப்பு இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலில், அந்த அமைப்பில் பணியாற்றிய 12-க்கும் மேற்பட்ட ஊழியர்கள் நேரடியாகப் பங்கேற்றதாக இஸ்ரேலிய உளவுத்துறை குற்றம் சாட்டியது. சிலர் தாக்குதலில் ஈடுபட்டதாகவும், சிலர் இஸ்ரேலியர்களைக் கடத்திச் செல்ல உதவியதாகவும் இஸ்ரேல் ஆதாரங்களைச் சமர்ப்பித்தது.









# இன்றைய ராசி பலன்கள் - 21.01.2025




இன்று நீங்கள் நம்பிக்கை உணர்வு மிகுந்து காணப்படுவீர்கள். உங்களிடம் ஸ்திரத்தன்மை காணப்படும். உங்களின் மாறுபாடற்ற மனநிலை காரணமாக நீங்கள் திறமையான முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்ளவும் அதனை குறித்தநேரத்தில் முடிக்கவும் பணியிடச் சூழல் உகந்ததாக இருக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெற்று மகிழ்வீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வை பகிர்ந்து கொள்வீர்கள். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் காணப் படாது. உங்களின் மகிழ்ச்சியான மனநிலை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று கட்டுப்பாடற்ற சூழ்நிலை காணப்படும். மந்தமான தருணங்கள் காணப்படும். எனவே இருப்பதைக் கொண்டு மகிழ வேண்டும். எதிர்காலத் திற்காக செயல்பட முயல வேண்டும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. முறை யாக திட்டமிடுவதன் மூலம் சிறப்பாக செயல்பட இயலும்.

திரைப்படம் பார்த்தல் மற்றும் வெளியிடங்களுக்கு செல்லுதல் போன்ற நிகழ்சிகள் மூலம் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பண இழப்பு காணப்படும். பயணத்தின்போது பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

பதட்டம் காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. யோகா பயிற்சியின் மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். குறைந்த முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். சிறந்த செயல் திறம் மூலம் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

பணி சம்பந்தமான புதிய வாய்ப்புகள் உருவாகலாம். அந்த வாய்ப்புகளை பயன்படுத்துவதன் மூலம் பணியில் முன்னேற்றம் காணலாம்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் குடும்ப வளர்ச்சி மற்றும் குடும்பத்தில் நடைபெறும் சுப நிகழ்ச்சி குறித்து ஆலோசிப் பீர்கள்.

பணவரவு மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் வங்கி யிருப்பு உயரும். அது உங்களுக்கு திருப்தியை அளிக் கும்.




இன்று முன்னேற்றகரமான பலன் களைக் காண்பீர்கள்.இன்று புத்துணர்ச்சி யுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். புதிய முயற்சிகளில் பங்கு கொள்வது உங்களுக்கு லாபகரமாக அளிக்கும்.

உங்கள் திறமை காரணமாக பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். முறையாக திட்டமிடுவதன் மூலம் உங்கள் பணிகளை உற்சாகமாக செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான உறவுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று போதிய பணம் காணப்படும். இன்று கணிச மான தொகை சேமிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று துடிப்பான நாளாக இருக் காது. ஆன்மீக பயணங்கள் உங்களுக்கு நல்ல பலனை அளிக்கும். பயணங்கள் மூலம் பலனுள்ள மாற்றங்கள் ஏற்படும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இதனால் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பது கடினம்.

குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். உங்கள் உறவின் சிக்கல்களை தீர்க்க உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும். இதன் மூலம் உறவில் நல்லிணக்கம் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. இதற்காக நீங்கள் செலவு செய்ய வேண்டியிருக்கும்.




பொறுமையான அணுகுமுறையை பராமரிப்பதன் மூலம் நீங்கள் சாதக மான பலன்களை காணலாம். சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரலாம். வெற்றி காண முறையாக திட்டமிட வேண்டும்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது. பணியின் போது நீங்கள் விழிப்புடன் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படும். சமநிலை அணுகுமுறை மேற்கொண்டு நல்ல புரிந் துணர்வை பராமரியுங்கள்.

அதிகரிக்கும் செலவுகள் கவலையை உண்டாக் கும். பணத்தை விவேகத்துடன் கையாள்வதன் மூலம் நிலைமையை சிறப்பாக சமாளிக்கலாம்.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள். அவற்றின் மூலம் லாப கரமான பலன் கிடைக்கும். நீங்கள் இன்று நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள்.

பணியில் உங்கள் செயல்திறன் அபாரமாக இருக்கும். உங்கள் பணிக்கு மேலதிகாரி களின் பாராட்டைப் பெறுவீர்கள். இதனால் திருப்தியும் சாதித்த உணர்வும் உங்களிடம் காணப்படும்.

உங்கள் வீட்டில் நடக்கும் சுப நிகழ்ச்சி ஒன்றைப் பற்றி உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவீர்கள். உங்கள் துணையுடன் கொண்டாடி மகிழ்வீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாகக் காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். ஆரோக் கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று காணப்படும் குழப்பமான சூழ்நிலை உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். அத்தகைய சூழ்நிலையை கையாள்வது கடினம். பிரார்த்தனை மூலம் ஆறுதல் பெறலாம்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். நீங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம். உங்கள் பணிகளை திறம்பட செய்ய முறையாக திட்டமிட வேண்டும்.

உங்களின் உணர்ச்சி வசப்பட்ட மனநிலையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். எதையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் நன்மை விளையும்.

நிதி நிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது.பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 21.01.2025




இன்று நீங்கள் பதற்றமான மன நிலையில் இருப்பீர்கள். இசை கேட்ப தன் மூலம் ஆறுதல் கிடைக்கும். விவாதம் செய்வதை தவிர்த்து நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

கவனக்குறைவு காரணமாக பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.உங்கள் பணிகளை சிறப்பாக செய்ய கவனமாக இருப்பது உதவியாக இருக்கும்.

உறவில் ஸ்திரத்தன்மை தக்கவைக்க உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. கூடுதல் செலவுகள் உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

தூக்கமின்மை காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு சாதகமான நாள். இதன் மூலம் திருப்தி உண்டாகும். வெற்றி காண எளிய அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

உங்கள் பணியில் நீங்கள் திறமை யாக செயல்படுவீர்கள்.இதனால் திருப்தி கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் நண்பர் இல்ல விழாவில் பங்கு கொள்ள பயணம் மேற்கொள்ளும் போது உங்கள் துணையுடன் அமைதியான தருணங்களை கழிப்பீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். கணிசமான தொகை காண அதிர்ஷ்டம் சாதகமாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்க ளிடம் காணப்படும் நம்பிக்கை காரணமாக நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். என்றாலும் உறுதி மற்றும் சளைக்காத குணம் மூலம் வெற்றி காண்பீர்கள்.

எதிர்மறை விளைவுகள் மற்றும் எதிர்மறை எண்ணங்கள் சிறப்பாக பணியாற்ற தடையாக இருக்கும். சில கட்டுப்பாடுகள் சிறந்த பலன் காண தடையாக இருக்கும்.

கவனமற்ற பேச்சு காரணமாக உங்கள் துணை யுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். உறவில் நல்லிணக்கம் காண நட்பான அணுகுமுறை மேற் கொள்ள வேண்டும்.

வரவும் செலவும் கலந்து காணப்படும். உங்கள் சேமிப்பை உயர்த்துவது கடினமாக உணர்வீர்கள்.

பாதுகாப்பின்மை உணர்வு காரணமாக நரம்பு பிரச்சினை ஏற்படலாம்.




இன்று பயணம் காணப்படுகின் றது. இது புதியதொடர்புகள் கிடைக்க பயனுள்ள வாய்ப்பை உருவாக்கித் தரும்.

பணியிடத்தில் நன்மையான பலன் கள் கிடைக்கும். உங்கள் கடின உழைப் பிற்கு பாராட்டைப் பெறுவீர்கள்.

பயணத்தின்போது உங்கள் துணையுடன் மகிழ்ச்சி யான தருணங்களை கொண்டாடி மகிழ்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்கும். என்றாலும் குடும்பத்திற்காக சிறிது பணம் செலவு செய்ய நேரும்.

ஆரோக்கியமான உணவு உட்கொள்வதன் மூலம் திடமாக இருக்கலாம். அசௌகரியத்தை சமாளிக்க லாம்.

# திருகோணமலை - கொழும்பு இரவு ரயில் சேவை ஆரம்பம்!




(ஏ.எச்.ஹஸ்பர்)

மிக நீண்ட நாள்களாகத் தடைப்பட்ட கொழும்பு – திருகோணமலைக்கான இரவு நேர ரயில் சேவை நேற்று இரவு திருகோணமலையில் இருந்து கொழும்பு நோக்கிய சேவையுடன் மீண்டும் ஆரம்பமாகியது.

கடந்த ஓரிரு மாத காலமாக தடைப் பட்ட இந்தச் சேவைய தற்போது ஆரம்ப மானதால் தலைநகருக்கும் திருகோண மலைக்கும் இடையிலான போக்குவரத்து இலகுபடுத்தப்பட்டுள்ளது. அரச அதிகாரி கள் கொழும்பு நோக்கி தங்கள் கடமை நிமித்தம் ஆசனப் பதிவுகளை மேற் கொண்டு அதிகமாக இரவு நேர சேவை யில் ஈடுபடுகின்றனர். இது போன்று வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையும் இந்த சேவை ஊடாக அதி கரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகி றது.

இருந்த போதிலும் தம்பலகாமம் பிர தேச சபைக்குட்பட்ட பல ரயில் கடவை களில் இரவில் வீதி மின் விளக்குகள் இன்மையால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக அஞ்சப்படுகிறது. இது தொடர்பில் தம்பலகாமம் பிரதேச சபை தவிசாளருக்கு பல முறை அறிவித்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப் படாமல் பாராமுகம் காட்டப்படுவதாகக் கூறப்படுகிறது.